بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஉல்லாஹுஉத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 19/08/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுஉமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 29 அன்னாரது காலத்தில் அரேபியாவுக்கு வெளியில் அநீதியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எதிரிகளுடன் நடைபெற்ற போர்களைப் பற்றிய குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

பத்ர் போர் சஹாபா பற்றிய நற்குறிப்பில், ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றிய குறிப்பின் தொடர்ச்சியாக **சிரியா மீது படையெடுத்தது** பற்றி இன்று கூறப்படும்.

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கிளர்ச்சி செய்த முர்ததக்களைத் தண்டித்து முடித்த பிறகு, அரேபியா உறுதியாக நிலைநின்ற பிறகு, அன்னார் அநீதியிழைத்து வந்த வெளிப்புற எதிரிகளில் [(தற்போதைய) சிரியா நாட்டின் அரசாங்கம் ரோமானிய பேரரசு என்றும் அங்கிருந்த அரசனை ரோமானிய சீஸர் என்றும் அழைக்கப்பட்டு வந்தது. அந்த] ரோமானியர்களோடு போர் புரிவது பற்றி சிந்தித்தார்கள். ஆனால், அன்னார் அதுவரை யாருக்கும் இதைப் பற்றித் தெரியப்படுத்தியிருக்கவில்லை.

அன்னார் இந்த சிந்தனையிலேயே ஆழ்ந்திருக்கும் போது, ஹஸ்ரத் ஷுரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்கள் அன்னார் முன் வந்து, 'ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கலீஃபா அவர்களே! தாங்கள் சிரியா மீது படையெடுப்பது பற்றி சிந்திக்கிறீர்களா' என்று பணிவுடன் கேட்டார்கள். அன்னார், 'ஆமாம்! எண்ணம் இருக்கிறது தான். ஆனால், இப்பொழுது யாருக்கும் தெரியப்படுத்தவில்லை. நீர் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டீர்?' என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) அவர்கள், 'நான் கனவு பார்த்தேன்' என்று பணிவுடன் கூறி, அதன் உள்ளடக்கத்தை முன் வைத்தார்கள்.

**நீண்ட கனவைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:** உமது கண்கள் குளிர்ச்சி அடையட்டும்! நீர் நல்ல கனவைப் பார்த்துள்ளீர்; நல்லதே நடக்கும். இன் ஷா அல்லாஹ்! நீர் இந்தக் கனவில், வெற்றிக்கான நற்செய்தியையும் என்னுடைய மரணத்தைப் பற்றிய தகவலையும் தெரியப்படுத்தியுள்ளீர். இந்த விஷயத்தைக் கூறும் போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. இதற்கு பிறகு, அன்னார் அவர்களுடைய கனவு முழுவதற்கும் விளக்கமளித்தார்கள். அதில் வெற்றியின் விவரங்களும் அன்னாரின் வஃபாத் குறித்த செய்திகளும் இருந்தன.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சிரியாவை வெற்றி காண்பதற்காகப் படையை ஆயத்தப்படுத்த எண்ணிய போது, அன்னார் ஆலோசனை பெறுவதற்காக, ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் அலீ, ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், ஹஸ்ரத் தல்ஹா, ஹஸ்ரத் ஸுபைர், ஹஸ்ரத் சஃது பின் அபீ வக்காஸ், ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ், பத்ர் மக்களில் பெரும் முஹாஜிர்கள், அன்ஸாரிகள் மற்றும் இதர சஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) அனைவரையும் வரவழைத்தார்கள். இந்த சஹாபா அன்னார் முன் ஆஜரான போது, அன்னார் கூறினார்கள்:

அல்லாஹ்வின் அருள்கள் எண்ணற்றவை. நற்செயல்கள் அவற்றிற்கு ஈடாக முடியாது. அல்லாஹ் உங்கள் மீது பேரருள் புரிந்தான்; ஒரு கலிமாவில் உங்களை ஒன்றிணைத்தான் என்பதற்காக அல்லாஹ்வை அதிகமாகப் புகழுங்கள். இன்று அரேபியர்கள் ஒரே சமுதாயமாகவும் ஒரே தாய் தந்தையின் பிள்ளைகளாகவும் இருக்கிறார்கள். நான் அவர்களை ரோமானியர்களோடு போர் புரிய சிரியாவுக்கு அனுப்பலாம் என்று கருதுகிறேன். அவர்களில் கொல்லப்படுபவர் ஷஹீத் ஆவார். உயிருடன் இருப்பவர் இஸ்லாம் மார்க்கத்தைத் தற்காத்தவாறு உயிருடன் இருப்பார்.

**ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் பணிவுடன் கூறினார்கள்:** அல்லாஹ்வின் மீது ஆணையாக! நன்மையின் எந்த விஷயத்தில் நாங்கள் தங்களை முந்த விரும்பியிருந்தாலும் சரி, தாங்கள் அதில் எப்பொழுதும் எங்களை விட முந்திச் சென்றுள்ளீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் தாங்கள் தற்போது எடுத்துரைத்த இந்த நோக்கத்திற்காகவே தங்களை சந்திக்க விரும்பினேன். நிச்சயமாக தங்களுடைய கருத்து சரியானதே! அல்லாஹ் தங்களுக்கு சரியான கருத்தின் புரிதலை வழங்கியுள்ளான்.

**சபையில் இருந்த அனைவரும் அன்னாருடைய ஆலோசனையை வழிமொழிந்தவாறு பணிவுடன் கூறினார்கள்:** நாங்கள் தங்களுடைய பேச்சைக் கேட்போம்; கட்டுப்படுவோம். கட்டளைக்கு மாறு செய்ய மாட்டோம். மேலும், தங்களுடைய அறிவிப்புக்கு செவிசாய்ப்போம்.

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கட்டளையின் பேரில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மக்களுக்கு இவ்வாறு அறிவித்தார்கள்:** மக்களே! உங்களுடைய ரோமானிய எதிரியுடன் போர் புரிய சிரியாவை நோக்கிப் புறப்படுங்கள். முஸ்லிம்களின் அமீராக ஹஸ்ரத் காலித் பின் சயீத் இருப்பார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சிரியா நாட்டு வெற்றிகளுக்காக எல்லாவற்றிற்கும் முதலாக ஹிஜ்ரீ 13 ஆம் ஆண்டு ஹஸ்ரத் காலித் பின் சயீத் அவர்களை ஒரு படையுடன் அனுப்பி வைத்தார்கள். ஓர் அறிவிப்பில் இருந்து தெரியவருவதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முர்தத்களுக்கு எதிராக 11 படைகளைத் தயார் செய்து அனுப்பி வைத்த போதே, ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களுக்கு சிரியாவின் எல்லைப் புறங்களைப் பாதுகாப்பதற்காகத் ‘தைமா’ செல்வதற்கான ஆணையிட்டவாறு மறு கட்டளை வரும் வரை தமது இடத்தை விட்டு நகரக்கூடாது என்று வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ரோமானியர்களுக்கு எதிராகப் போர் புரிவதற்காக மதீனத்து மக்களை மட்டுமின்றி, மற்ற பகுதிகளின் முஸ்லிம்களையும் ஆயத்தப்படுத்த ஆரம்பித்தார்கள். போரில் கலந்து கொள்ளுமாறு அவர்களுக்கு எழுச்சியூட்டினார்கள். இதற்காகவே அன்னார் ஏமன் வாசிகளுக்கும் ஒரு கடிதம் எழுதினார்கள். அதை ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் கையில் கொடுத்தனுப்பினார்கள். அவர்கள் ஏமன் வாசிகளுக்குத் தாக்கம் ஏற்படும் வகையில், தூதுச் செய்தியை எட்ட வைத்த பிறகு, மதீனாவுக்குத் திரும்பி வந்து அந்த மக்களின் வருகையின் நற்செய்தியை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

மறுபுறம் ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் 'தைமா' சென்றடைந்து அங்கேயே தங்கி விட்டார்கள். அக்கம் பக்கத்தின் பல கூட்டங்கள் அவர்களுடன் வந்து இணைந்து கொண்டன. ரோமானியர்களுக்கு முஸ்லிம்களின் இந்த மாபெரும் படையைப் பற்றித் தெரிய வந்தபோது, அவர்கள் தமது தாக்கத்திற்குக் கீழிருந்த அரேபியர்களிடம் சிரியா போருக்காகப் படைகளைக் கோரினார்கள். இதைப் பற்றி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரியப்படுத்திய போது, அன்னார் ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு எழுதினார்கள்:

'நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள். சற்றும் பதற்றம் அடையாதீர்கள். அல்லாஹ்விடம் உதவி கோருங்கள்.'

ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் ரோமானியர்களை நோக்கி முன்னேறிச் சென்றார்கள். ஆனால், அந்த மக்கள் சிதறிப் போனதனால், ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் அவர்களின் இடத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அவர்களிடம் ஒன்று கூடியிருந்த பெரும்பாலான மக்கள் முஸ்லிம் ஆகி விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அதைப் பற்றி தெரியப்படுத்திய போது இவ்வாறு வழிகாட்டல் கிடைத்தது: 'நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள். ஆனால், பின்னாலிருந்து தாக்குதல் தொடுப்பதற்கு எதிரிக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் அளவு முன்னால் சென்று விடாதீர்கள்.'

ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் மக்களுடன் முன்னேறிச் சென்றவாறு பாஹான் எனும் பாதிரியாரையும் அவனது படையையும் தோற்கடித்தார்கள். பலரைக் கொன்றார்கள். ஆனால், பாஹான் தப்பியோடி தமாஸ்கஸில் தஞ்சம் அடைந்தான். ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் இதைப் பற்றி தகவல் தெரிவித்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் மேற்கொண்டு உதவிப்படையைக் கோரினார்கள். இதனால் ஜைஷுல் பதால் என்ற பெயரையுடைய படை உதவி புரிவதற்காக ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களைச் சென்றடைந்தது. அதற்குப் பிறகும் கூட, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களுக்கு சிரியா போருக்காக எழுச்சியூட்டி வந்தார்கள்.

ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களுக்கு உதவி புரிவதற்காக சிரியா சென்றடையுமாறு ஹஸ்ரத் வலீத் பின் உக்பா (ரலி) அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கினார்கள். அவர்கள் (காலித்) அவர்களை சென்றடைந்த போது, காலித் (ரலி) அவர்களிடம், 'மதீனத்து மக்கள் தங்களுடைய சகோதரர்களுக்கு உதவிப்புரிய துடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்

படைகளை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடு செய்கிறார்கள்' என்று கூறினார்கள்.

இதைக் கேட்டு ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்கவில்லை. அவர்கள் ரோமானியர்களை வெற்றி காண்பதற்கான பெருமிதம் தமது பங்கில் வர வேண்டும் என்ற எண்ணத்தில் ஹஸ்ரத் வலீத் பின் உக்பா (ரலி) அவர்களை உடன் அழைத்துக் கொண்டு ரோமானியர்களின் மாபெரும் படை மீது தாக்குதல் தொடுக்க நினைத்தார்கள். அதை அந்த மக்களின் படைத்தளபதி பாஹான் வழிநடத்திக் கொண்டிருந்தான்.

ஆக, ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் தாக்குதல் தொடுத்த வேளையில், வெற்றி உணர்ச்சிக்கு உட்பட்டு காலத்தின் கலீஃபா அவர்களின் வழிகாட்டலைக் கருத்திற் கொள்ளாமல் விட்டு விட்டார்கள். தமது பின்பக்கத்தைப் பாதுகாப்பதை விட்டும் முற்றிலும் கவனமற்றவர்கள் ஆகி விட்டார்கள். மற்ற தலைவர்கள் வந்தடைவதற்கு முன்னரே ரோமானியர்களுடன் போர் புரிய ஆரம்பித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் எதிரியின் படையில் முன்னுக்கு நுழைந்து கொண்டே சென்றார்கள். அப்பொழுது அவர்களுடன் ஹஸ்ரத் வலீத் பின் உக்பா (ரலி) அவர்கள் மட்டுமின்றி, ஹஸ்ரத் ஸுல்கிலாஃ (ரலி) அவர்களும் ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களுக்குத் தமது மகனும் தோழர்களும் பாஹான் கையால் ஷஹீதான தகவல் கிடைத்த போது, அவர்கள் அங்கிருந்து தப்பி ஓடி விட்டார்கள்.

இதற்குப் பிறகு, இன்னும் பல தோழர்களும் குதிரைகள் மற்றும் ஒட்டகங்கள் மீது பயணித்து தமது படையை விட்டுத் தனித்துச் சென்று விட்டார்கள். ஆனால், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் தமது இடத்தை விட்டு நகரவில்லை. மாறாக, முஸ்லிம்களுக்கு உதவி செய்து வந்தார்கள். பாஹான் மற்றும் அவனது படைகளை ஹஸ்ரத் காலித் அவர்களைப் பின்தொடர்வதிலிருந்து தடுத்து வைத்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் தோல்வியடைந்து மக்கா மற்றும் மதீனாவுக்கு இடையில் உள்ள 'ஸுல் மர்வஹ்' என்ற இடத்தைச் சென்றடைந்தார்கள்.

இதைப் பற்றிய தகவல் கிடைத்த போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மீது கோபத்தை வெளிப்படுத்தினார்கள். மேலும், மதீனாவுக்குள் நுழைய அனுமதி வழங்கவில்லை. ஆயினும், இதற்குப் பிறகு அவர்களுக்கு அனுமதி கிடைத்ததும், அவர்கள் மதீனாவில் நுழைந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் தமது இந்த செயலுக்காக மன்னிப்புக் கேட்டார்கள்.

ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களின் இந்தத் தோல்விக்குப் பிறகும் கூட, ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் உறுதிப்பாடும் தைரியமும் சற்றும் மாறுபடவில்லை. அன்னாருக்கு ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களும் ஸுல் கிலாஃ (ரலி) அவர்களும் ரோமானியர்களின் பிடியிலிருந்து இஸ்லாமிய படைகளைக் காப்பாற்றி சிரியாவின் எல்லைக்குத் திரும்பி கொண்டு வந்திருக்கிறார்கள்; அங்கு உதவிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற

தகவல் கிடைத்த போது, அன்னார் ஒரு நொடிப் பொழுது கூட வீணடிக்காமல் உதவிப்படை அனுப்பவதற்கான ஏற்பாட்டைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இதற்காக அன்னார் நான்கு பெரிய படைகளைத் தயார் செய்தார்கள். அவற்றை சிரியாவின் பல்வேறு பகுதிகளை நோக்கி அனுப்பி வைத்தார்கள்.

உதவிப்படையாக அனுப்பப்பட்ட படைகளில் முதல் படையை ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்பாயன் (ரலி) அவர்களுடைய தலைமையில் அனுப்பி வைத்தார்கள். தமாஸ்கஸை வெற்றி காண்பதும், தேவை ஏற்படும் போது இதர மூன்று படைகளுக்கும் உதவி செய்வதும் அதன் நோக்கமாக இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் **ஹஸ்ரத் யஸீத் (ரலி) அவர்களுக்கு அறிவுரை வழங்கியவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:**

தனது நற்செயல் மூலமாக எல்லாரையும் விட அதிகமாக அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுபவரே மக்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமானவர் ஆவார். நீர் உமது படையைச் சென்றடையும் போது அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வீராக! அவர்களுக்கு அறிவுரை கூற வேண்டும் என்றால், சுருக்கமாகக் கூறுவீராக! ஏனெனில், அதிகமாக உரையாடுவது பல விஷயங்களை மறக்கடித்து விடுகிறது. நீர் உம்மை சரியாக்கி வைத்திருந்தால், மக்கள் தாமாகவே சரியாகி விடுவார்கள். தொழுகைகளை அவற்றின் நேரத்தில் ருகூ மற்றும் சஜ்தாக்களை முழுமை படுத்தியவாறு நிறைவேற்றுவீராக! அவற்றில் அழுது மன்றாடுதலை முழுமையாகப் பேணுவீராக!

எதிரியின் தூதுவர் உம்மிடம் வரும் போது அவரை மிகக் குறைந்த நேரமே இருக்க விட்டு, விரைவாகத் திருப்பி அனுப்பி விடுவீராக! அவர்களை உங்களது படை சூழலுக்கு நடுவில் வைத்திருங்கள். உமது மக்களை அவர்களுடன் உரையாட விடாதீர்! நீர் அவர்களுடன் உரையாடும் போது, உமது ரகசியத்தை அவர்களிடம் வெளிப்படுத்தக் கூடாது. இல்லையென்றால், உங்களது விவகாரங்கள் சீர்கெட்டுப் போய் விடும்.

நீர் யாரிடமிருந்தாவது ஆலோசனை பெற வேண்டும் என்றால், பிறகு, அவருக்கு முழு விவரத்தையும் கூற வேண்டும். அப்போதுதான் அவரால் சரியான ஆலோசனை வழங்க முடியும். மேலும், குறைந்த பட்ச இழப்பு ஏற்படும். இரவு நேரத்தில் உமது தோழர்களுடன் உரையாடுவீராக! உமக்குப் பல செய்திகள் கிடைத்து விடும். பாதுகாப்புப் படையில் அதிகம் பேரை வைப்பீராக! அவர்களை உமது படைகளில் பரப்பி விடுவீராக!

பெரும்பாலும் தகவல் கொடுக்காமல் தீடீரென்று அவர்களின் காவல் நிலையங்களைப் பார்வையிடுவீராக! எவரைத் தமது பாதுகாப்பு இடத்தில் கவனமற்றவராகக் காண்கிறீரோ அவரை நன்றாகத் தண்டிப்பீராக! தண்டனை வழங்கும் போது வரம்பு மீறாமல் இருப்பீராக! இரவின் ஆரம்பத்தின் பணி நேரத்தை அதிகமாக வைப்பீராக! ஏனெனில், அதில் விழித்திருப்பது எளிமையான விஷயம். இரவின் கடைசிப் பகுதி பணி நேரம் குறைவாக இருக்கட்டும்.

தண்டனைக்குரியவரைத் தண்டிப்பதற்கு அஞ்சாதீர்! அதில் மென்மையாக நடந்து கொள்ளாதீர்! தண்டனை வழங்குவதில் அவசரப்படாதீர்! முற்றிலும் கண்டும் காணாமலும் விட்டு விடாதீர்! அவர்களின் ரகசியங்களை மக்களுக்குத்

தெரியப்படுத்தாதீர்! அவர்களின் புறத்தையே போதுமானதாகக் கருதுவீராக! வீணான மக்களுடன் அமராதீர்! உண்மையான மற்றும் நன்றியுணர்வுள்ள மக்களுடன் அமர்வீராக! எதிரியுடன் மோதும் போது உறுதியாக நின்று விடுவீராக! கோழைத்தனம் காட்டாதீர்! இல்லையென்றால், மக்களும் கோழைகள் ஆகி விடுவார்கள். போர்ச்செல்வத்தில் துரோகம் செய்வதிலிருந்து தவிர்ந்திருப்பீராக! அது தேவையுடைமைக்கு அருகில் கொண்டு செல்கிறது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இது ஒரு செயல் திட்டமாகும். இதை ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு பொறுப்பாளரும் பணியாற்றுவதற்காக செயல் படுத்த வேண்டியது அவசியமாகும்.

**இரண்டாவது படை** ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஒருவரான மற்றும் நேர்வழிபெற்ற கிலாஃபத்தின் புகழ்பெற்ற படைத்தளபதிகளில் ஒருவரான **ஹஸ்ரத் ஷுரஹ்பீல் பின் ஹஸனா (ரலி)** அவர்களுடையதாக இருந்தது.

**மூன்றாவது படை** உம்மத்தின் நம்பகமானவரும் அஷ்ரா முபஷ்ஷராவில் (வாழ்நாளிலேயே சொர்கத்திற்கான நற்செய்தி வழங்கப்பட்ட பத்து நபர்களில்) ஒருவராவதற்கான நற்பேறு பெற்றவருமான **ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி)** அவர்களுடையதாக இருந்தது. அவர்களுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அரேபியாவின் குதிரை வீரர்களில் மாபெரும் கண்ணியமும் அந்தஸ்த்தும் பெற்றவரான ஹஸ்ரத் கைஸ் பின் ஹுபைரஹ் (ரலி) அவர்களையும் அனுப்பி வைத்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இந்த நற்குறிப்பு எஞ்சியிருக்கிறது. இனி தொடர்ந்து கொண்டே இருக்கும்.

**ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆகஸ்ட் 12 அன்று ரப்வாவில் ஷஹீதான தாருர் ரஹ்மத்தைச் சேர்ந்த, அப்துல் கனீ சாஹிப் அவர்களின் மகன் நஸீர் அஹ்மத் சாஹிப் அவர்களின் நற்குறிப்பை விவரமாக எடுத்துரைத்தார்கள்.**

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)